# வற்றாத நீரூற்று

Transcribed from a message spoken on September 5, 2010 in Chennai

By *R.S.Milton*

பொதுவாக, தேவன் எதைச் சொல்ல விரும்புகிறாரோ, அதை நாம் அப்படியே புரிந்துகொள்வதில்லை. நம்முடைய நிலை எப்படி இருக்கிறதோ. அந்த நிலைக்கு ஏற்றாற்போலத்தான் பேசுகிறவர் என்ன சொல்லுகிறார் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்.

## காதுள்ளவன் கேட்கக்கடவன்

ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்த முன்னோடிகள் *ரைட் சகோதரர்கள்.* அவர்கள் தாங்கள் உருவாக்கிய ஆகாயவிமானம் பறக்கும் என்ற நிலையை எட்டியபிறகு, அதில் முதன்முறையாகப் பறக்க விரும்பினார்கள். அதைச் சோதித்துப்பார்ப்பதற்கு, தாங்கள் வேலை செய்த நகரத்திலிருந்து சொந்த ஊருக்கு முதன்முறையாக அந்த விமானத்தில் பறந்துபோகலாம் என்று அவர்கள் தீர்மானித்தார்கள். அதற்குமுன் யாரும் இப்படி ஆகாய விமானத்தில் பறந்ததில்லை. "இந்தக் கிறிஸ்துமசுக்கு நாங்கள் பறந்துவருகிறோம்," என்று தங்கள் சொந்த ஊரில் இருந்த சகோதரிக்கு இவர்கள் ஒரு தந்தி அனுப்பினார்கள். அவர்களுடைய சகோதரி அந்தத் தந்தியைப் பார்த்ததும் மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். "விடுமுறைக்கு வராத என்னுடைய சகோதரர்கள் இந்த விடுமறைக்கு வீட்டுக்கு வருகிறார்கள், கிறிஸ்துமசுக்கு வீட்டுக்கு வருகிறார்கள். அதுவும் சீக்கிரமாக வருகிறார்கள்," என்று அவள் மிகவும் மகிழ்ந்தாள். தன் நண்பர்களிடமும் அப்படியே சொன்னாள்.

அந்த ஒரு வரித் தந்தியில் இருந்த செய்தியை அவள் புரிந்துகொண்டாளா? "விடுமுறைக்கு வருகிறார்கள். கிறிஸ்துமசுக்கு வருகிறார்கள். என்னுடைய சகோதரர்கள் வருகிறார்கள், சீக்கிரமாக வருகிறார்கள்," என்றுதான் அவள் நினைத்தாள். அவர்கள் பறந்துவருகிறார்கள் என்ற செய்தியை அவள் புரிந்துகொள்ளவில்லை. "பறந்து வருகிறோம்" என்பதுதான் அந்தத் தந்தியின் செய்தி. ஆனால், அவர்களுடைய சகோதரி பெற்றுக்கொண்ட செய்தி என்ன? "வருகிறார்கள், அண்ணன்கள், கிறிஸ்துமசுக்கு," என்பவைகள்தான் அவளுக்குப் பெரிய காரியங்களாகத் தோன்றின. "பறந்து" என்பது அவளுக்குத் தோன்றவேயில்லை. அதற்குக் காரணம் இருக்கிறது. ஏனென்றால் இதற்குமுன் யாரும் பறந்ததில்லை, அதை யாரும் பார்த்ததில்லை.

ஆகவே, நம்முடைய மனமும், நம்முடைய நிலையும் எப்படியிருக்கிறதோ அதைப் பொறுத்துத்தான் நாம் ஒரு செய்தியைப் புரிந்துகொள்கிறோம். இயேசுவே பேசினாலும்கூட, அவர் ஒன்றைப் பேச முயற்சிசெய்வார். ஆனால், நாம் வேறொன்றைப் புரிந்துகொள்வோம். என்னுடைய நிலை என்னவோ அதைப்பொறுத்துதான் நான் புரிந்துகொள்வேன்.

எனவே, நான் ஒரு சிறிய ஆலோசனை சொல்லுகிறேன். "கேட்கிற செவிகளை எனக்குத் தாரும்," என்று ஜெபியுங்கள். இதன் பொருள் நீங்கள் யாரும் கேட்கவில்லை என்பதல்ல. பேசுவது எந்த அளவுக்கு முக்கியமோ அந்த அளவுக்குக் கேட்பதும் முக்கியம். ஏனென்றால், பேசுவதற்கு நாம் நேரம் செலவழிக்க வேண்டும். அதுபோல, கேட்பதற்கும் நாம் நேரம் செலவழிக்க வேண்டும்.

நாம் தேவனுடைய பிள்ளைகளோடு நேரம் செலவழிக்கிறோம். அப்போது உண்மையிலேயே தேவனிடமிருந்து நாம் ஒரு ஞானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த உலகத்தில் வேறு எங்கும் கிடைக்காத ஒரு ஞானம் தேவனிடத்தில் கிடைக்கும். எந்தப் பல்கலைக்கழகத்திலும் கிடைக்காத அல்லது புத்தகங்கள் படித்தாலும் பெற்றுக்கொள்ள முடியாத, ஒரு தெய்வீக அறிவை நாம் தேவனிடத்திலிருந்து பெறுகிறோம். இது நான் என் வாழ்க்கையிலே கண்டு உணர்ந்த ஒரு பாடம்.

எனவே நாம், "ஆண்டவரே, நீர் பேசுகிறதைக் கேட்கத் திறந்த செவிகளை எனக்குத் தாரும். நீர் என்ன சொல்ல முயற்சி செய்கிறீரோ, அதை நான் புரிந்துகொள்வதற்கும், பேசுவதற்கும் உதவிசெய்யும்," என்று ஜெபிக்க வேண்டும். அது நம் வாழ்க்கையின் திசையையே மாற்றிவிடும். ஒருவேளை நாம் ஒரு பெரிய பிரச்சினையில் இருப்போம். நாம் செய்தியை நன்றாகக் கேட்டால் பிரச்சினைக்குத் தீர்வு அங்கு இருக்கும். எனவே, நாம் கவனமாகக் கேட்க வேண்டும். கேட்கிற விதத்தைக்குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

ஆண்டவராகிய இயேசு அடிக்கடி, “காதுள்ளவன் கேட்கக்கடவன்,” என்று சொன்னார். இதன் பொருள் என்னவென்றால் நாம் கேட்கும்போதுகூட நம் மனம் பல காரியங்களில் திரிந்துகொண்டிருக்கும். அதை ஒருமுகப்படுத்திக் கவனமாகக் கேட்க வேண்டும்.

நாம் கேட்பது, பேசுவது நம்முடைய வாழ்க்கையை, அனுபவ வாழ்க்கையை, நடைமுறை வாக்கையை, பாதிக்க வேண்டும். முக்கியமாக தேவனுடைய பிள்ளைகளுடைய வாழ்க்கை ஆசீர்வாதமான வாழ்க்கை யாக இருக்க வேண்டும். அவிசுவாசிகள் வாழ்கிற வாழ்க்கையைவிட தேவனுடைய மக்கள் வாழ்கிற வாழ்க்கை ஆசீர்வாதமாக இருக்க வேண்டுமென்றால் நாம் நம் நிலையைச் சரிசெய்துகொள்ள வேண்டும். மகிழ்ச்சி, சமாதானம், திருப்தி, இளைப்பாறுதல் ஆகியவைகளெல்லாம் ஆசீர்வாதத்தின் அடையாளங்கள். சில சமயங்களில் அவிசுவாசிகள் விசுவாசிகளைவிட மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதுபோல் தோன்றும். அவர்களுக்கு இல்லாத இளைப்பாறுதலும், மகிழ்ச்சியும், சமாதானமும், திருப்தியும், புத்துணர்ச்சியும், வெளிச்சமும் தேவனுடைய பிள்ளைகளுக்கு இருக்க வேண்டும்.

## தேவனுடைய பராமரிப்பு

தேவனுடைய பிள்ளைகள் மத்தியில் கெம்பீர சத்தம் உண்டாயிருக்க வேண்டும். அதற்குக் காரணம் என்ன? இது நேர்மறையாகச் சிந்திப்பதால் ஏற்படும் வல்லமை அல்ல. “நாம் எப்போதும் நேர்மறையாகவே சிந் திக்க வேண்டும்,” என்று ஒரு சாரார் சொல்லுகிறார்கள். நாம் எப்போதும் நேர்மறையாகத்தான் சிந்திக்க வேண்டுமா? ஆம், நேர்மறையாகத்தான் யோசிக்க வேண்டும். எதிர்மறையாக யோசிக்கக்கூடாது. இந்த உலகத்து மக்கள் அதைப்பற்றி நிறையப் புத்தகங்கள் எழுதுகிறார்கள். எப்படி நேர்மறையாக யோசிப்பது? “நான் நல்ல மதிப்பெண்கள் வாங்குவேன். நான் நல்ல வேலைக்குப் போவேன். நான் நல்ல வாழ்க்கை வாழ்வேன். நான் சுகமாக இருப்பேன் என்று நேர்மறையாக யோசித்தால், நமக்கு நடைபெறுவது நேர் மறையாகவே இருக்கும்,” என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இதில் பாதி உண்மை, பாதிப் பொய். எந் தப் பாதி உண்மை என்றால் நாம் நேர்மறையாகச் சிந்திக்க வேண்டும் என்பது உண்மை. எது உண்மை யில்லை என்றால் நாம் நேர்மறையாக எண்ணுவதால் அது நடக்கும் என்பதில் சற்று பொய் இருக்கிறது.

ஏன் நாம் நேர்மறையாக யோசிக்க வேண்டும் என்றால் நமக்குத் தேவன் இருக்கிறார். எனவே, நாம் எதிர் மறையாக யோசிக்க வேண்டிய அவசியம் இல்லை. நம்முடைய வாழ்க்கையின் எல்லா அம்சங்களும் தேவனுடைய அரசாட்சியின்கீழும், தேவனுடைய கட்டுப்பாட்டின்கீழும், தேவனுடைய ஒழுங்கின்கீழும் இருக் கின்றன. எனவே, நாம் எதைப்பற்றியும் எதிர்மறையாகச் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. எல்லா வற்றையும்பற்றி, எல்லா நெருக்கங்களையும்பற்றியும்கூட, நாம் நேர்மறையாக யோசிக்கலாம். எந்தக் கொடிய நெருக்கத்திலும் நாம் தேவனுடைய அரசாட்சியின்கீழ் இருக்கிறோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, *“இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆகிலும், அவைகளில் ஒன்றாகிலும் தேவனால் மறக்கப்படுவதில்லை. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆகையால், பயப்படாதிருங்கள். அநேகம் அடைக்கலான் குருவி களைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்’* (லூக். 12:6, 7) என்று சொன்னார். எனவே, நாம் நேர்மறையாக யோசிப்பதற்குக் காரணம் “நாம் நேர்மறையாக யோசித்தால் நம் வாழ்க்கையில் எல் லாமே நேர்மறையாக நடக்கும்” என்பதற்காக அல்ல. எதற்காக நாம் நேர்மறையாக யோசிக்கிறோம்? ஏனென்றால், நாம் நம்முடைய தந்தையின், நம்முடைய பிதாவின், ஆளுகையின்கீழ், வாழ்கிறோம்.

இதுவரை நான் பேசியதின் சாராம்சம் என்ன? தேவனுடைய மக்கள் நம்முடைய தந்தையின், நம்முடைய பிதாவின், அரசாட்சியின்கீழ் இருக்கிறார்கள். நாம் அவருடைய அரசாட்சியின்கீழ் இருப்பதால் அவரைமீறி யாரும் நமக்கு ஊறு விளைவிக்க முடியாது, எந்தத் துன்பமும் விளைவிக்க முடியாது. நாம் தைரியமாக வாழலாம். தைரியத்தை வரவழைக்க வேண்டாம். நாம் நம் அரசனுடைய அரசாட்சியின்கீழ் இருக்கிறோம்.

## தாகம் தீர்க்கும் தண்ணீர்

நாம் தேவன்மேல் வைத்திருக்கும் விசுவாசத்தை உறுதிப்படுத்துவதற்காக ஒரேவொரு சம்பவத்தை அல்லது ஒரேவொரு காரியத்தைச் சொல்ல விரும்புகிறேன். நாம் இரண்டு மிக முக்கியமான பகுதிகளை வாசித் தோம். ஒன்று யோவான் 4ஆம் அதிகாரம். இன்னொன்று யோவான் 7ஆம் அதிகாரம். யோவான் 4ஆம் அதிகாரத்தில் ஆண்டவராகிய இயேசு தண்ணீரை உவமையாகவைத்துப் பேசுகிறார். “இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகம் உண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்

காலும் தாகம் உண்டாகாது. நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்றாய் இருக்கும்," (யோவான் 4:13, 14) என்றார். இது மிகவும் அற்புதமான தண் ணீர். எப்போதும் ஊறுகிற கிணறுகளை நாம் வெளியே பார்த்திருப்போம். அப்படிப்பட்ட ஒரு கிணறை தேவன் நமக்குள் வைத்துவிட்டால் எப்படியிருக்கும்! அதற்குப்பின் ஒருநாளும் தாகம் ஏற்படாது.

இந்தப் பூமியில் மனிதர்கள் அங்கும் இங்கும் ஓடியாடி பல வேலைகளைச் செய்வது தங்களுடைய தாகத் தைத் தீர்ப்பதற்காகத்தான். வாலிபனாக இருக்கும்போது நண்பர்களைப் போய்ப்பார்ப்பது, திரைப்படங்களுக் குப் போவது, சுற்றுலா போவதுபோன்ற பல காரியங்கள் அவர்களுக்கு இன்பத்தைத் தருகின்றன. வய தானபிறகு ஒரு நிலம் வாங்குவது, வீடு கட்டுவது, பங்குச் சந்தையில் பணம் போடுவதுபோன்ற காரி யங்கள் இன்பத்தைத் தரலாம். ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்வதுபோல, அது அப் போதைக்கு இன்பத்தையும், மகிழ்ச்சியையும் தருவதுபோல் தோன்றலாம். "இந்தத் தண்ணீரைக் குடிப் பவனுக்கு மறுபடியும் தாகம் உண்டாகும்." இது ஒரு பக்கம். இதை நான் வலியுறுத்த விரும்பவில்லை. ஆனால், இதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த உலகத்தில் மனிதர்கள் இந்தக் காரியங்கள் தங்கள் தாகத்தைத் தீர்க்கும் என்று நினைக்கிறார்கள். வாலிபர்களாக இருக்கும்போது நிறைய திரைப்படம் பார்ப்பார்கள். ஆனால், 50 வயதில் திரைப்படம் பார்க்கிற எண்ணமே வராது. ஏனென்றால், பல பிரச்சினை கள் அவனைப் பாதிக்கும். அப்போது முந்தைய காலத்தில் தன் தாகத்தைத் தீர்ப்பதாக நினைத்தது இப்போது தாகத்தைத் தீர்க்கவில்லை.

யோவான் 7ஆம் அதிகாரத்தில், "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும்," (யோவான் 7:38) என்று இயேசு சொன்னார். நிச்சயமாகத் தண்ணீர் என்பது ஓர் உவமை. அவ்வளவுதான். இந்த உண்மையை விளக்குவதற்காக இந்த உவமையை, சித்தி ரத்தை, அவர் பயன்படுத்துகிறார். "உனக்குள்ளே ஒரு கிணறு இருக்கும். அந்தக் கிணற்றில் எப்போதும் தண்ணீர் ஊறிக்கொண்டேயிருக்கும். அதன்பின் ஊறுகிற அந்தத் தண்ணீர் பாய்ந்தோடும்."

அது தண்ணீர் கிடைக்காத ஓர் அரிதான காலம். எப்போதும் ஊறுகிற ஒரு கிணறு கிடைக்கிறது என்றால் அது மிகப் பெரிய ஆசீர்வாதம். இப்போது தண்ணீர் வேண்டுமென்றால் ஆழ்துணைக் கிணறு தோண்டு கிறோம். அந்தக் காலத்தில் அப்படியில்லை. அவர்கள் முதலாவது கிணறு தோண்டுவார்கள். அப்போது அங்கு சுனைகள் அல்லது ஊற்றுகள் இருக்க வேண்டும். அங்கு தண்ணீர் எப்போதும் ஊறிக்கொண்டிருக்க வேண்டும். இப்படிப்பட்ட கிணறு எங்கு கிடைக்கிறதோ அதைச்சுற்றித்தான் மக்கள் வாழ ஆரம்பித்தார்கள். அப்படித்தான் நகரங்கள் உருவாயின. அவர்கள் எங்கேயாவது ஒரு பட்டணத்தைக் கட்டிக்கொண்டு அதன் பின் கிணறு தோண்டவில்லை. முதலில் கிணறு தோண்டினார்கள். தண்ணீர் கிடைத்ததென்றால் அதைச் சுற்றிப் பட்டணத்தைக் கட்டினார்கள். இதுதான் பண்டைய காலத்தில் நடந்தது.

### தண்ணீரும் பரிசுத்த ஆவியானவரும்

பல சித்திரங்களுக்கு விளக்கம் இருக்காது. ஆனால், இந்தச் சித்திரத்துக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யோவான் 7ஆம் அதிகாரத்திலேயே விளக்கம் கொடுத்துவிடுகிறார். "தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற பரிசுத்த ஆவியைக்குறித்து அவர் இப்படிச் சொன்னார்." யோவான் 4ஆம் அதிகாரத் திலும், 7ஆம் அதிகாரத்திலும் தண்ணீர் என்கிற படத்தைவைத்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரைப்பற்றிப் பேசுகிறார்.

"உங்களுக்கு நான் பரிசுத்த ஆவியைத் தருவேன். அவர் எப்போதும் ஊறுகிற கிணற்றைப்போல் அல்லது நதியைப்போல் இருப்பார்," என்று சொல்லும்போது அது நமக்குப் பரவசத்தைத் தராது. மாதம் 2 இலட்சம் சம்பளமுள்ள வேலை கிடைத்தால் அது பரவசத்தைத் தரும். ஆண்டவராகிய இயேசு நமக்குப் பரிசுத்த ஆவியைத் தருவதாகச் சொல்லும்போது அது நமக்கு அவ்வளவு பரவசத்தைத் தருவதில்லை.

### வற்றாத வளங்கள்

பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய எல்லா வளங்களையும் நமக்குக் கொண்டுவருவார். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அல்லது இந்த மனித வாழ்க்கைக்கு என்ன தேவையோ அவையெல்லாவற் றையும் தேவனிடமிருந்து பரிசுத்த ஆவியானவர் கொண்டுவருவார். தேவனிடமிருந்து நம்மைப் பிரித்துவிட வேண்டும் என்பது பிசாசின் ஒரு பெரிய தந்திரம். ஏனென்றால், ஒரு மனிதன் தேவனோடு உறவு வைத் திருந்தால் அவனால் பெற முடியாத வளம் ஒன்றும் இல்லை என்று அவனுக்குத் தெரியும். ஒருவனைத்

தேவனிடமிருந்து பிரித்துவிட்டால் அவன் ஒருவேளை சின்னச்சின்ன குளங்களிலிருந்து தண்ணீர் குடிக்க லாம். ஆனால், எப்படியும் அந்தக் குளம் ஒருநாள் வற்றிப்போகும்.

“என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத் தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள். தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள்” *(எரே. 2:13).* இஸ்ரயேல் மக்கள் ஜீவத் தண்ணீர் ஊற்றை விட்டுவிட்டு தங்களுக்கென்று வெடிப்புள்ள தொட்டிகளை வெட்டிக்கொண்டார்கள். இந்தப் பூமியில் மக்கள் வெடிப்புள்ள தொட்டிகளைக் கட்டிக்கொள் கிறார்கள். அதில் இருக்கிற தண்ணீர் கசிந்து வெளியே போய்விடும் அல்லது வற்றிப்போய்விடும்.

ஆனால், ஒருவனுக்குத் தேவனோடு உறவு இருந்தால் நம்முடைய எதிரியாகிய சாத்தான் நம்மைத் தாக்கும் போதுகூட தேவன் நம்மைத் தாங்க முடியும், நம்முடைய எல்லாத் தேவைகளையும்-அது ஆவிக்குரிய தேவையாக இருந்தாலும் சரி, வாழ்க்கைத் தேவையாக இருந்தாலும் சரி, உடலுக்குரிய தேவையாக இருந்தாலும் சரி-அவர் நமக்கு வழங்குவார்.

இதை உங்கள் மனதில் பதியவைப்பதற்காக நான் உங்களுக்கு ஒரு நிகழ்ச்சியைச் சொல்லுகிறேன். ஒரு பட்டணத்துக்கு ஒரு நல்ல கிணறு வேண்டும் என்று நான் முதலில் சொன்னேன். கிணறு இருந்தால்தான் நகரம் பிழைக்கும். ஊறுகிற கிணறு வேண்டும். அதில் கோடைக்காலத்திலும் தண்ணீர் இருக்க வேண்டும். அதில் தண்ணீர் ஒருபோதும் வற்றக்கூடாது.

### கீகோன் கிணறும், சீலோவாம் குளமும்

எருசலேமுக்குத் தண்ணீர் தருகிற வற்றாத ஒரு கிணறு இருந்தது. அந்தக் கிணற்றுக்குப் பெயர் கீகோன். கீகோன் எப்படிப்பட்ட ஊற்று என்றால் அது பொங்கி நிரம்பி ஓடுமாம். அந்தக் கிணற்றில் அப்படிப்பட்ட ஊற்று உண்டாம். தண்ணீர் எப்போதும் ஒரேமாதிரி ஊறாதாம். ஊறிக்கொண்டேயிருக்கும். சில சமயங்களில் நிறைய ஊறும். அப்போது பொங்கிப் பாய்ந்தோடும். எனவே, அந்தக் கிணற்றைச்சுற்றி வாய்க்கால் கட்டி கிதரோன் என்னும் பள்ளத்தாக்கில் பயிர்களை வளர்த்தார்கள்.

பண்டைய காலத்தில் ஒரு நகரத்தைச்சுற்றி மதில்சுவர் கட்டியிருப்பார்கள். ஏனென்றால் எதிரி படையெடுத்து வரும்போது மதில்சுவர் இருந்தால்தான் பாதுகாப்பு உண்டு. அந்த மதில்சுவர் நம் வீட்டுச் சுவர்போல் இருக்கும் என்று நினைக்கக்கூடாது. குதிரைகள் ஓடக்கூடிய அளவுக்கு அந்த மதில்சுவர் அகலமாக இருக்கும். அதன்மேல் போர்வீரர்கள் அமர்ந்திருந்து, எதிரி வரும்போது தாக்குவார்கள். எருசலேம் அல்லது சீயோன் ஒரு மலையின்மேல் இருக்கிறது. எனவே, அந்த நகரத்தில் மதில்கள் மிகவும் உயரமாக இருக்கும். ஒரு எதிரி படையெடுத்து வந்தால் அவன் கீழேயிருந்து மேலே போக வேண்டும். எனவே, எருசலேம் மதில்மேல் இருந்த போர்வீரர்களுக்கு அது சாதகமான அம்சம். ஏதிரிகள் அந்த நகரத்தை அவ்வளவு எளிதாகப் பிடித்துவிட முடியாது.

ஆனால், எருசலேம் நகரம் முழுவதற்கும் தண்ணீர் தருகிற கீகோன் என்கிற கிணறு நகரத்துக்கு வெளியே, மதில்சுவருக்கு வெளியே, 300 அல்லது 400 மீட்டருக்கு வெளியே இருக்கிறது. எதிரி படையெடுத்து வரு கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவன் முதலில் கிணற்றைப் பிடித்துக்கொள்வான். ஒன்று அவ னுக்குத் தண்ணீர் கிடைக்கும். இரண்டு, நகரத்திலிருக்கிற மக்களுக்குத் தண்ணீர் கிடைக்காது. தண்ணீர் இல்லையென்றால் அவர்கள் சரண் அடைந்துவிடுவார்கள். போர் முடிந்துவிடும்.

எனவே, என்ன செய்யலாம்? கிணறு நகரத்துக்கு உள்ளேயிருக்கும்படி நகரத்தின் மதில்சுவரை கிணற்றைச் சுற்றிக் கட்டியிருக்கலாம். ஆனால், அவர்கள் அப்படிக் கட்டவில்லை. ஏனென்றால் இந்தக் கீகோன் கிணறு மிகவும் தாழ்வான பகுதியில், பள்ளத்தாக்கில், இருக்கிறது. நகரம் மிகவும் உயர்ந்த மலையில் இருக்கிறது. மதில்சுவரைக் கிணற்றைச்சுற்றிக் கட்டினால் கிணற்றுப் பக்கம் இருக்கிற மதில்சுவர் மிகவும் தாழ்வாக இருக்கும். அதை எதிரி சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். மலையின்மேல் இருக்கிற அவ்வளவு பாதுகாப்பான நகரத்துக்கு, கீகோன் அருகில் இருக்கிற மதில்சுவர் மட்டும் தாழ்வாக மாறிவிடும். எனவே, அவர்கள் மதில்சுவரை அப்படிக் கட்டவில்லை. மதில்சுவரை மலையிலேயேதான் சுற்றிக் கட்டினார்கள்.

எசேக்கியா ராஜாவின் காலத்தில் அசீரியா ராஜாவாகிய சனகெரிப் என்பவன் எருசலேமின்மேல் படை யெடுத்தான். எருசலேமின்மேல் படையெடுப்பதற்குமுன் அவன் சமாரியா நாட்டைக் கைப்பற்றினான். “சமா ரியாவைக் கைப்பற்றியபின் எருசலேமின்மேல்தான் அவன் படையெடுப்பான்,” என்று அவனுக்குத் தெரி யும். கிணற்றில் தண்ணீர் இருந்தால் படையெடுத்துவருகிற இராணுவம் திரும்பப் போகுமா? எங்கு தண்

ணீர் கிடைக்கிறதோ அங்கு பாளயம் இறங்கிவிடுவார்கள். எனவே, எசேக்கியா ராஜா என்ன செய்தான் தெரியுமா? கிதரோனில் இருந்த கீகோன் கிணறு உட்பட வெளியே இருந்த எல்லாக் கிணறுகளையும், ஊற்றுகளையும், ஓடைகளையும் மூடிவிட்டான். ஏன்? அந்த அசீரிய ராஜாவுக்குத் தண்ணீர் இருக்கக்கூடாது என்பதற்காக இப்படிச் செய்தான். சரி, எதிரிக்குத் தண்ணீர் கிடைக்காது. எருசலேம் நகரத்து மக்களுக்குத் தண்ணீர் வேண்டுமே! அவர்கள் என்ன செய்தார்களாம் தெரியுமா? தரைக்கு எட்டு அடிக்குக் கீழே குடைந்து ஒரு வாய்க்கால் கட்டினார்கள். கீகோனிலிருந்து குடைய ஆரம்பித்து, மதிலுக்குக் கீழே வந்து எருசலேம் நகரத்தில் ஒரு குளம் கட்டினார்கள். அந்தக் குளத்துக்குப் பெயர் சீலோவாம். கீகோன் வெளியே. சீலோவாம் உள்ளே. இரண்டையும் இணைக்க ஒரு குழாய் வாய்க்கால் கட்டினார்கள். தரைக்கு 8 அடிக்குக்கீழே கட்டினார்கள். கீகோன் பக்கத்திலிருந்து ஒரு குழு குடைய ஆரம்பித்தது. சீலோவாம் பக்கத்திலிருந்து இன்னொரு குழு குடைய ஆரம்பித்தது. இரண்டு குழுவும் எப்படி வந்து ஒரே இடத்தில் இணைய முடியும்? மேலே இருந்து தட்டித்தட்டி அடுத்து

சனகெரிப் ராஜா படையெடுத்து வந்து முற்றுகையிட்டான். முற்றுகையிட்டு பயங்கரமாகச் சவால் விட்டான். "நீங்கள் எதின்மேல் நம்பிக்கையாயிருக்கிறீர்கள்? நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மை அசீரியருடைய ராஜாவின் கைக்குத் தப்புவிப்பார் என்று எசேக்கியா சொல்லி, நீங்கள் பசியினாலும் தாகத்தினாலும் சாகும்படி உங்களைப் போதிக்கிறான் அல்லவா?...நானும் என் பிதாக்களும் தேசத்துச் சகல ஜனங்களுக்கும் செய்ததை அறியீர்களோ? அந்தத் தேசங்களுடைய ஜாதிகளின் தேவர்கள் அவர்கள் தேசத்தை நம்முடைய கைக்குத் தப்புவிக்க அவர்களுக்குப் பெலன் இருந்ததோ? உங்கள் தேவன் உங்களை என் கைக்குதவன் தன் ஜனத்தை என் கைக்குத் தப்புவிக்கப் பலவானாயிருந்தான்? இப்போதும் எசேக்கியா உங்களை வஞ் சிக்கவும், இப்படி உங்களைப் போதிக்கவும் இடங்கொடுக்க வேண்டாம். நீங்கள் அவனை நம்பவும் வேண் டாம். ஏனென்றால், எந்த ஜாதியின் தேவனும் தன் ஜனத்தை, என் கைக்கும், என் பிதாக்களின் கைக்கும், தப்புவிக்கக்கூடாதிருந்ததே. உங்கள் தேவன் உங்களை என் கைக்குத் தப்புவிப்பது எப்படி?" என்று அசீரியா ராஜா கர்த்தருக்கு விரோதமாகவும், எசேக்கியாவுக்கு விரோதமாகவும் அதிகமாய்ப் பேசினான். இதைக் கேட்டும்போது பயம் நம்மைக் கவ்விக்கொள்ளும்.

எசேக்கியாவோடு அப்போது ஏசாயா தீர்க்கதரிசி இருக்கிறார். "தேவன் நம்மைக் காப்பாற்றுவார். தேவன் நமக்கு வெற்றி தருவார்," என்று சொல்லி இவர்கள் மக்களைப் பலப்படுத்தினார்கள். நீண்ட நாட்கள் முற்றுகையிட்டபிறகும் அவர்கள் சரணடையவில்லை.

முடிவு என்னவாயிற்று என்றால் அவனுடைய நாட்டில் உள்நாட்டுப் போர் வந்துவிட்டது என்று சனகெரிப் ராஜாவுக்கு ஒரு செய்தி வந்தது.. எனவே, அவன் முற்றுகையைக் கைவிட்டுவிட்டு நாட்டுக்குத் திரும்ப வேண்டியதாயிற்று.

அவன் பல மாதங்கள் முற்றுகையிட்டும் எருசலேமைக் கைப்பற்ற முடியவில்லை. காரணம் என்ன? கார ணம் என்னவென்றால் கீகோனிலிருந்து எப்போதும் வற்றாக தண்ணீர் சீலோவாமுக்கு வந்துகொண் டிருந்தது.

### தேவனோடு மறைவான உறவு

அதுபோல, தேவனுக்கும் நமக்கும் இடையே குடைந்தெடுத்த ஒரு பாதை இருக்கிறது. நம்மை எப்படி யாவது கைப்பற்றிவிட வேண்டும் என்று சாத்தான் முற்றுகை போடுவான். ஆனால், அவன் எவ்வளவு நாள் முற்றுகை போட்டாலும் அவனால் கைப்பற்ற முடியாது. ஏனென்றால், அவனுக்குத் தெரியாத ஒரு ஊற்றிலிருந்து தண்ணீர் நமக்கு வந்துகொண்டேயிருக்கிறது.

"இந்த நோயில் இவன் செத்துப்போவான்," என்று சாத்தான் நினைப்பான். "கைவிட்டுவிடுவார்கள் என்று நினைத்தேன். பாதியில் விட்டுவிடுவார்கள் என்று நினைத்தேன். ஆனால், எப்படி?" என்று சாத்தான் வியப் பான். அவன் எப்போதும் சோர்வைத் தந்து, தொய்வைத் தந்து, தோல்வியைத் தந்து, நம்மைப் பயமுறுத்துவான்.

ஆனால், பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய எல்லா வளங்களையும் தேவனிடமிருந்து நமக்குக் கொண்டு வருகிறார். அது நம்மையும் திருப்தியாக்கும், இன்னும் ஒரு படி மேலே போய் நாம் மற்றவர்களுக்கும் திருப்தியைக் கொடுப்போம். பல சமயங்களில் நமக்கே ஆறுதல் இருக்காது. "எனக்கே ஆறுதல் இல்லை. நான் எப்படி இன்னொருவருக்கு ஆறுதல் சொல்வது? பயப்படாதே என்று எப்படிச் சொல்வது?" என்று

நினைப்போம். நமக்குள் வற்றாத ஒரு சுனையுடன் ஒரு இணைப்பு இருக்கிறது. எனவே, எதிரி நம்மைத் தோற்கடிக்க முடியாது.

எதற்காகத் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம்? இப்படிப்பட்ட ஒரு வற்றாத கிணற்றோடு, வற்றாத சுனையோடு, நமக்குத் தொடர்பு இருக்கிறது. சாத்தான் வந்து, “நீங்கள் என் நண்பராகிவிடுங்கள். நான் உங்களை ஆதரிக்கிறேன்,” என்று சொல்வான். “நீ இதைச் செய், அதைச் செய். நீ மகிழ்ச்சியாக இருப் பாய்,” என்று சொல்வான். நாமும் ஆசைப்படுவோம். ஆனால், தேவனை அறிந்தவர்கள், அவர் எப்படிப் பட்ட வற்றாத, தீர்ந்துபோகாத வளங்களின் ஊற்று என்று தெரிந்தவர்கள், “அவர் போதுமானவர்” என்று சொல்வார்கள். வெறுமனே கவிதை நயத்துக்காக “தேவன் போதுமானவர்,” என்று நாம் சொல்லவில்லை. உண்மையிலே நம் வாழ்க்கையில் எல்லா நிலைமைக்கும் தேவன் போதுமானவர்.

முற்றுகை குறைந்த காலமாகவோ, கூடுதல் காலமாகவோ இருக்கலாம். காத்திருக்கிற காலம் நம்மைப் பரீட்சிக்கும். தேவன் நம்மை நடத்துவார்.